வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 21.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நிர்வாகம், வெளிப்படைத் தன்மை மற்றும் புதுமை ஆகியவற்றில் இந்தியா புதிய அளவுகோள்களை அமைத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை 2 நாள் அரசு முறை பயணமாக சவுதி அரேபியாவிற்கு பயணம் மேற்கொள்கிறார்.

அமெரிக்க துணை அதிபர் திரு ஜே டி வான்ஸ் 4 நாள் அரசு முறை பயணமாக இன்று இந்தியா வந்துள்ளார்.

உலக கத்தோலிக்க சபை தலைவர் போப் பிரான்சிஸ் இன்று வாடிகனில் காலமானார்.

குடிமைப் பணிகள் தினம் 1(18)

நிர்வாகம், வெளிப்படைத் தன்மை மற்றும் புதுமை ஆகியவற்றில் இந்தியா புதிய அளவுகோள்களை அமைத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். தேசிய குடிமைப் பணிகள் தினத்தை ஒட்டி,

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக பணியாற்றிய குடிமைப் பணி அதிகாரிகளுக்கு விருதுகளை வழங்கி உரையாற்றிய அவர், நேர்மை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வோடு குடிமைப்பணி அதிகாரிகள் நாட்டுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற லட்சியத்தை சர்தார் வல்லபாய் பட்டேல் வடிவமைத்தார் என்றும், அதனை பின்பற்றி வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய நாம் முயற்சிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். நாட்டில் உள்ள இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் மகளிரின் கனவுகளை நனவாக்கும் வகையில், அசாதாரணமான வேகத்துடன் குடிமைப்பணி அதிகாரிகள் செயலாற்ற வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார். வளர்ச்சி அடைந்த இந்தியா எனும் இலக்கை நோக்கி நாம் அனைவரும் செயலாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்ட பிரதமர், நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இளைஞர்கள் முன்னேற்றம் கண்டு வருகிறார்கள் என்றும், அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் அரசின் செயல்பாடுகள் அமைய வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்தார். அரசின் திட்டங்கள்



மக்களை சென்றடையும் விதம், அதனால் ஏற்படும் பயன்கள் போன்றவற்றை பொறுத்தே நிர்வாகத்தின் தரம் தீர்மானிக்கப்படுவதாகவும்

பிரதமர் தெரிவித்தார். அரசாங்கத்தால் தற்போது உருவாக்கப்படும் கொள்கைகளும், முடிவுகளும் அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கப் போவதாக தெரிவித்த பிரதமர், தொழில்நுட்ப யுகத்தில் நிர்வாகம் என்பது அமைப்புகளை நிர்வகிப்பதை பற்றியது அல்ல என்றும், அது வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகளை அதிகரிப்பது தொடர்பானது என்றும் கூறினார். இவ்விழாவில் பேசிய மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திரசிங் கடந்த 10 ஆண்டுகளாக தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வெளிப்படைத்தன்மையுடன் அரசின் செயல்பாடுகள் அமைந்து வருவதாக தெரிவித்தார்.

மோடி (15)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை 2 நாள் அரசு முறை பயணமாக சவுதி அரேபியாவிற்கு பயணம் மேற்கொள்கிறார். இந்த பயணத்தின் போது அந்நாட்டின் வணிக மையமான ஜட்டாவிற்கு செல்கிறார். 40 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய பிரதமர் ஜட்டாவிற்கு செல்வது குறிப்பிடத் தக்கது. இந்த பயணத்தின் போது, அந்நாட்டின் ஒரு தொழிற்சாலையை பார்வையிடும் பிரதமர், அங்கு பணியாற்றும் இந்திய தொழிலாளர்களுடன் கலந்துரையாட உள்ளார். இந்தியா மற்றும் சவுதி அரேபியா இடையே

வளர்ந்து வரும் பொருளாதார உறவுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் பிரதமரின் இந்த பயணம் அமைந்துள்ளது. சவுதி அரேபியாவில் இந்திய முதலீடுகள் சமீபத்திய ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது. கடந்த 2023 ஆகஸ்ட் நிலவரப்படி, ஏறக்குறைய 3 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலாண்மை மற்றும் ஆலோசனை சேவைகள், கட்டுமான திட்டங்கள், தொலைதொடர்பு, தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் மேம்பாடு, மருந்துகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா சார்பில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

*வான்ஸ் (4)*

அமெரிக்க துணை அதிபர் திரு ஜே டி வான்ஸ் 4 நாள் அரசு முறை பயணமாக இன்று இந்தியா வந்துள்ளார். புதுடெல்லி பாலம் விமான நிலையத்தில் வந்திறங்கிய அவரை மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் வரவேற்றார். இதுகுறித்த ஒரு செய்திகுறிப்பு....

(வாய்ஸ்)

*வான்ஸ் வாய்ஸ் (13)*

அமெரிக்க துணை அதிபர் திரு ஜே டி வான்ஸ் இந்தியாவிற்கு வருவது இது முதன் முறையாகும். அவரின் இந்திய வருகை இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் கடந்த பிப்ரவரி மாதம் பிரதமர் திரு நரேந்திர மோடியின் அமெரிக்க பயணத்தின் போது வெளியிடப்பட்ட இந்திய அமெரிக்க கூட்டு அறிக்கையின் அம்சங்களை செயல்படுத்துவது குறித்து பரிசீலனை செய்யும் வாய்ப்பாக அமைந்துள்ளது. அமெரிக்க துணை அதிபரின் இந்த பயணத்தினால் இருநாடுகளும் பிராந்திய மற்றும் உலகளாவிய முன்னேற்றங்கள் குறித்த கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், இன்று மாலை பிரதமர் திரு நரேந்திர மோடியை திரு ஜே டி வான்ஸ் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். மேலும், டெல்லியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் அவர், நாளை ஜெய்ப்பூர் மற்றும் ஆக்ராவிற்கு செல்ல திட்டமிட்டுள்ளார்.

*நிர்மலா* (12)

மகளிர், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் ஏழைகளின் முன்னேற்றத்தை விக்சித்பாரத் -2047 நோக்கமாக கொண்டுள்ளது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். 5 நாள்

பயணமாக அமெரிக்காவிற்கு சென்றுள்ள அவர், இன்று அங்குள்ள இந்திய புலம் பெயர்ந்தோர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் உரையாற்றினார். அப்போது இந்தியா சூரிய மின்சக்தி தொடர்பான துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது என்றும், புதுமை மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும் மின்னணு பொது உள் கட்டமைப்பில் முன்னேற்றத்தை கண்டு வருவதாகவும் கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை கொண்ட தலைமையாலும், அரசின் உறுதியான முயற்சிகளாலும் இந்தியா வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக மாறியுள்ளது என்று திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இரங்கல் 1(17)

நீண்ட நாட்கள் உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்று வந்த உலக கத்தோலிக்க சபை தலைவர் போப் பிரான்சிஸ் இன்று காலமானார். அவருக்கு வயது 88. அவர் 12 ஆண்டுகள் போப் ஆண்டவராக பதவி வகித்தார்.

புனித போப் பிரான்ஸிஸ் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், புனித போப் பிரான்ஸிஸ் மறைவால் மிகுந்த வேதனை

அடைந்ததாகவும், இந்த சோகமான தருணத்தில் உலகளாவிய கத்தோலிக்க சமூகத்திற்கு தமது மனம் நெகிழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். கருணை, அடக்கம், ஆன்மீக துணிவு ஆகியவற்றின் கலங்கரை விளக்கமாக, உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களால் போப் பிரான்ஸிஸ் எப்போதும் நினைவு கூறப்படுவார் என்று குறிப்பிட்டுள்ளார்.

போப் பிரான்சிஸ் மறைவு குறித்து புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், கிறிஸ்துவர்கள் மட்டும் அல்லாமல், உலகெங்கிலும் உள்ள மக்களின் அன்பையும், நன் மதிப்பையும் பெற்றவர் என்றும், அவரை இழந்து வாடும் அனைவருக்கும் தன்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், மனிதருள் புனிதராக திகழ்ந்த போப் பிரான்சிஸ் இழப்பு மனித

குலத்திற்கு ஈடு செய்ய முடியாத ஒன்று எனவும், அவரது இழப்பால் துயருறும் கத்தோலிக்க கிறிஸ்துவ சகோதர, சகோதரிகள் துக்கத்தில் பங்கெடுத்துக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

வேவ்ஸ்(7)

வேவ்ஸ் 2025 மாநாட்டை ஒட்டி, 11 இந்திய நகரங்களில் நடத்தப்பட்ட அனிம் மற்றும் மங்கா போட்டிகளில் இருந்து இறுதி போட்டியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

வேவ்ஸ் வாய்ஸ் (15)

ஜப்பான் நாட்டில் தோன்றி உலகம் முழுவதும் பரவி வரும் அனிம் மற்றும் மங்கா தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிறந்த படக் கதைகளை உருவாக்குபவர்களை உலகிற்கு அடையாளம் காட்டும் இந்த போட்டிகளில் மாணவர்கள் மற்றும் தொழில்முறை கலைஞர்களும் கலந்து கொண்டனர். போட்டி நடைபெற்ற 11 நகரங்களில் இருந்தும் வெற்றியாளர்களை தேர்ந்தெடுக்க அனிமேஷன், காமிக்ஸ், மற்றும் பொழுதுபோக்கு துறைகளை சார்ந்த வல்லுனர்கள் அடங்கிய புகழ்பெற்ற

நடுவர் குழு சிறந்த பங்களிப்பை வழங்கியது. இந்தியாவின் வளமான மொழி மற்றும் கலையின் பன்முகத் தன்மையை வெளிப்படுத்தும் விதமாக இந்த அனிம் மற்றும் மங்கா போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இறுதிப் போட்டிக்காக மும்பைக்கு செல்கின்றனர். அங்கு அவர்கள் தங்கள் படைப்புகளை சர்வதேச நடுவர் மன்றம் மற்றும் பார்வையாளர்களுக்கு நேரடியாக வழங்க உள்ளனர். இந்தியாவின் முதல் ஊடக மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாடு வேவ்ஸ் 2025 அடுத்த மாதம் 1 ஆம் தேதி தொடங்கி 4 ஆம் தேதி வரை மும்பையில் நடைபெற உள்ளது..

இஸ்ரோ(10)

இஸ்ரோவின் விண்வெளி டாக்கிங் பரிசோதனை ஸ்பே-டெக்ஸ் திட்டத்தின் கீழ், 2 ஆவது முறையாக செயற்கை கோள்களை இணைக்கும் பணி இன்று வெற்றிகரமாக நிறைவடைந்ததாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், அடுத்த 2 வாரங்களில் செயற்கை கோள்களை இணைப்பது தொடர்பான அடுத்தக் கட்ட சோதனைகள் நடத்த திட்டமிட்டு இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். இந்த ஸ்பே-டெக்ஸ் திட்டத்தின் மூலமாக கடந்த

ஜனவரி மாதம் முதல் முறையாக செயற்கை கோள்களை இணைக்கும் பணி வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டதையும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

*சிலைமாலை* (9)

பாவேந்தர் பாரதிதாசன் நினைவு தினம் இன்று புதுச்சேரி அரசு சார்பில் அனுசரிக்கப் பட்டது. இதனை ஒட்டி, பாரதிபூங்காவில் அமைந்துள்ள அவரது திரு உருவ சிலைக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவருடன் சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு ஜெயக்குமார், திரு பி.ஆர்.என் திருமுருகன், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசுகொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே எஸ் பி ரமேஷ், திரு பாஸ்கர் (எ)தட்சணாமூர்த்தி, திரு லட்சுமிகாந்தன் ஆகியோரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*ஐபிஎல்* (3)

ஐபில் 20-20 கிரிக்கெட் போட்டி தொடரில், கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, குஜராத் டைடன்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

வானிலை (4)

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கரைக்கால் பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றம் நிகழ்வதற்கான வாய்ப்பு குறைவு என்றும், அதே நேரத்தில் ஒரு சில இடங்களில் வெப்ப நிலை உயரக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.